ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 2.5 – பின்னைமணாளனை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.5 – பின்னைமணாளனை

‡ பின்னை மணாளனைப் ⋆ பேரில் கிடந்தானை ⋆
முன்னை அமரர் ⋆ முதல் தனி வித்தினை ⋆
    என்னையும் எங்கள் ⋆ குடி முழுதாட் கொண்ட ⋆
மன்னனை வந்து குழல்வாராய் அக்காக்காய் ! ⋆
    மாதவன் தன் குழல்வாராய் அக்காக்காய் ! ॥ **2.5.1** ॥

பேயின் முலை உண்ட ⋆ பிள்ளை இவன் முன்னம் ⋆
மாயச் சகடும் ⋆ மருதும் இறுத்தவன் ⋆
    காயாமலர் வண்ணன் ⋆ கண்ணன் கருங்குழல் ⋆
தூய்தாக வந்து குழல்வாராய் அக்காக்காய் ! ⋆
    தூமணி வண்ணன் குழல்வாராய் அக்காக்காய் ! ॥ **2.5.2** ॥

திண்ணக் கலத்தில் ⋆ திரை உறிமேல் வைத்த ⋆
வெண்ணெய் விழுங்கி ⋆ விரைய உறங்கிடும் ⋆
    அண்ணல் ⋆ அமரர் பெருமானை ⋆ ஆயர் தம்
கண்ணனை வந்து குழல்வாராய் அக்காக்காய் ! ⋆
    கார் முகில் வண்ணன் குழல்வாராய் அக்காக்காய் ! ॥ **2.5.3** ॥

பள்ளத்தில் மேயும் ⋆ பறவை உருக் கொண்டு ⋆
கள்ள அசுரன் ⋆ வருவானைத் தான் கண்டு ⋆
    புள்ளிதுவென்று ⋆ பொதுக்கோ வாய் கீண்டிட்ட ⋆
பிள்ளையை வந்து குழல்வாராய் அக்காக்காய் ! ⋆
    பேய்முலை உண்டான் குழல்வாராய் அக்காக்காய் ! ॥ **2.5.4** ॥

கற்றினம் மேய்த்துக் ⋆ கனிக்கொரு கன்றினை ⋆
பற்றி எறிந்த ⋆ பரமன் திருமுடி ⋆
உற்றன பேசி ⋆ நீ ஓடித் திரியாதே ⋆
அற்றைக்கும் வந்து குழல்வாராய் அக்காக்காய் ! ⋆
ஆழியான் தன் குழல்வாராய் அக்காக்காய் ! ॥ **2.5.5** ॥

கிழக்கில் குடி மன்னர் ⋆ கேடிலாதாரை ⋆
அழிப்பான் நினைந்திட்டு ⋆ அவ்வாழி அதனால் ⋆
விழிக்கும் அளவிலே ⋆ வேர் அறுத்தானைக் ⋆
குழற்கணியாகக் குழல்வாராய் அக்காக்காய் ! ⋆
கோவிந்தன் தன் குழல்வாராய் அக்காக்காய் ! ॥ **2.5.6** ॥

பிண்டத் திரளையும் ⋆ பேய்க்கிட்ட நீர்ச் சோறும் ⋆
உண்டற்கு வேண்டி ⋆ நீ ஓடித் திரியாதே ⋆
அண்டத்தமரர் ⋆ பெருமான் அழகமர் ⋆
வண்டொத்திருண்ட குழல்வாராய் அக்காக்காய் ! ⋆
மாயவன் தன் குழல்வாராய் அக்காக்காய் ! ॥ **2.5.7** ॥

உந்தி எழுந்த ⋆ உருவ மலர் தன்னில் ⋆
சந்தச் சதுமுகன் தன்னைப் ⋆ படைத்தவன் ⋆
கொந்தக் குழலைக் ⋆ குறந்து புளி அட்டி ⋆
தந்தத்தின் சீப்பால் குழல்வாராய் அக்காக்காய் ! ⋆
தாமோதரன் தன் குழல்வாராய் அக்காக்காய் ! ॥ **2.5.8** ॥

மன்னன் தன் தேவிமார் ⋆ கண்டு மகிழ்வெய்த ⋆
முன் இவ் உலகினை ⋆ முற்றும் அளந்தவன் ⋆
பொன்னின் முடியினைப் ⋆ பூவணை மேல் வைத்து ⋆
பின்னே இருந்து குழல்வாராய் அக்காக்காய் ! ⋆
பேராயிரத்தான் குழல்வாராய் அக்காக்காய் ! ॥ **2.5.9** ॥

‡ கண்டார் பழியாமே⋆ அக்காக்காய்⋆ கார் வண்ணன்
வண்டார் குழல்வார⋆ வா என்ற ஆய்ச்சி சொல்⋆
விண் தோய் மதிள்⋆ வில்லிபுத்தூர்க் கோன் பட்டன் சொல்⋆
கொண்டாடிப் பாடக்⋆ குறுகா வினை தாமே ! ॥ **2.5.10** ॥

அடிவரவு — பின்னை பேயின் திண்ணம் பள்ளத்தில் கற்றினம் கிழக்கில் பிண்டம் உந்தி மன்னன் கண்டார் வேலி

பின்னைமணாளனை முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்